# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

அனுப்புநர்

பொ. ஜெயராமன், பி.எஸ்.சி., பி.எல்.,
இணை ஆணையர் / செயல் அலுவலர்,
அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில்,
ஸ்ரீரங்கம், திருச்சிராப்பள்ளி – 6.

பெறுநர்

==================================================================================

ந.க. எண் 2788 / 1426 / டி1 / நாள் 23.03.2017

அய்யா,

பொருள் : ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா – மலர் வெளியீடு – ஆய்வுக் கட்டுரைகள் அனுப்பக் கேட்டல் – தொடர்பாக.

–––––––

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலில் இராமானுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா சிறப்புற நடைபெற உள்ளது. இவ்விழாவினையொட்டி இராமானுஜரைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய விழாமலர் வெளியிடப்பட உள்ளது. அம்மலரில் கீழ்க்காணும் தலைப்புகளிலோ அல்லது அதனை ஒட்டிய தாங்கள் விரும்பும் ஒரு வித்தியாசமான பார்வையுள்ள சிறப்புத் தலைப்புகளிலோ ஆய்வுக் கட்டுரை வழங்கிட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) பொ. ஜெயராமன்,
இணை ஆணையர்/செயல் அலுவலர்,

உத்தரவுப்படி அனுப்பப்படுகிறது.

மேலாளர்.

# இராமானுஜர் பற்றிய தலைப்புகள்

1. சமூக நல நோக்கில் இராமானுஜரின் ஸ்ரீபாஷ்யம்
2. பொது உடமை நோக்கில் இராமானுஜரின் பகவத் கீதா பாஷ்யம்
3. ஸ்ரீ இராமானுஜரின் மனித நேயச் செயல்கள்
4. இராமானுஜரின் அருளிச் செயல் ஈடுபாடு
5. இராமானுஜரின் சமயநோக்கும் சமுதாய முன்னேற்றமும்
6. காரேய் கருணை இராமானுஜா
7. நிகரற்ற நிர்வாகி இராமானுஜர்
8. குலம் பாராது குணம் போற்றும் குணசீலர்
9. இராமானுஜரும் ஆதிசங்கரரும்
10. அன்னைத்தமிழ் வளர்த்த இராமானுஜர்
11. வைணவத்தால் வாழ்வியல் நெறிகள்
12. பெண்ணின் பெருமை போற்றிய இராமானுஜர்
13. சமய நல்லிணக்கம் வளர்த்த இராமானுஜர்
14. மனித குல வரலாற்றில் வியப்பூட்டும் தத்துவ மேதை இராமானுஜர்
15. வைணவ நெறியை மக்கள் நெறியாக்கிய வித்தகர் இராமானுஜர்
16. திருக்கோயில்களில் தமிழ் வழிபாடு நடத்த நழிவகுத்த இராமானுஜர்
17. சீர்திருத்தச் செம்மல் இராமானுஜர்
18. திருவரங்கத்தில் இராமானுஜரின்அன்றாட செயல்பாடுகள்
19. ஆழ்வார் பாசுரங்களுக்கு இராமானுஜர் அளித்த நய உரைகள்
20. இராமானுஜ நூற்றந்தாதி கூறும் இராமானுஜரின் சிறப்புகள்
21. இராமானுஜரும் அறு சமயங்களும்
22. மூன்று மதா காரியங்களில் இராமானுஜரின் தனிச் சிறப்பு
23. இராமானுஜர் ஆழ்வார்களிடம் கொண்ட பக்தி
24. இராமானுஜரும் திருக்கோயில்களின் சீர்திருத்தங்களும் (1) திருவரங்கம், (2) திருமலை, (3) திருநாராயணபுரம் (மேல்கோட்டை)
25. இராமானுஜரின் சமுதாய நலப்பணிகள்
26. இராமானுஜர் பற்றிய தமிழ் நூல்கள்
27. இராமானுஜர் பற்றிய வடமொழி நூல்கள்
28. இராமானுஜரைப் பின்பற்றிய வடநாட்டு சமயங்கள்
29. இராமானுஜரின் திருக்கோயில் வழிபாட்டுச் சீர்திருத்தங்கள்
30. இராமானுஜர் அருளிய நூல்களின் நோக்கங்கள்
31. இராமானுஜரும் பன்னிரு ஆழ்வார்களும்

1. இராமானுஜரைப் பற்றி மேற்காணும் தலைப்புகளில் அல்லது அதனை ஒட்டிய தலைப்புகளிலோ ஒரே ஒரு கட்டுரை மட்டும் அனுப்பலாம்.
2. கட்டுரை A4 தாளில் ஐந்து பக்கங்களுக்கு மிகாமல் கணினியில் தட்டச்சு செய்து இத்திருக்கோயிலுக்கு 20.04.2017க்குள் கிடைக்குமாறு அனுப்ப கேட்டுக் கொள்ளப்படுகிறது.
3. கட்டுரைகளில் வடமொழிச் சொற்கள் கலக்காமல் தூய தமிழில் இருக்க வேண்டும். தவிர்க்க முடியாத இடங்களில் பிறமொழிச் சொற்களை கையாண்டால் அடிக்குறிப்பிட்டு அதன் தமிழ்பொருளை அவசியம் கூறவும்.
4. கட்டுரைகளைப் பொறுத்து மலர்க் குழுவின் முடிவே இறுதியானது. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் மட்டுமே மலரில் மற்றும் திருக்கோயில் இணையதளத்தில் வெளியிடப்படும். மற்ற கட்டுரைகளும் திருக்கோயில் நூலகத்தில் பாதுகாக்கப்படும்.
5. தாங்கள் எழுத விரும்பும் கட்டுரை தலைப்பை உறுதி செய்து இக்கடிதம் கிடைத்த இரு தினங்களுக்குள் தொலைபேசி அல்லது கடிதம் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. கணினியில் தட்டச்சு செய்த கட்டுரைகளை (srirangamtemple@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு PDF அல்லது Scan செய்து அனுப்பி வைக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
7. மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டியவர்

இணை ஆணையர் / செயல் அலுவலர் 0431 - 2432246

தொகுப்பாளர் - 94433 - 98769